www.tamilarangam.net

கறுப்பு

தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 022

01 யூலை 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# வெளிச்சத்திற்கு வந்துள்ள “கே.பி.“யின் துரோக நாடகம்!

தமிழீழ மக்கள் மீதான இனப் படுகொலை வெகு சமர்த்தியமாக நடாத்தி முடிக்கப்பட்டு ஒரு வருடங்கள் தாண்டிய நிலையில், அந்தப் படுகொலைகளின் காரணகர்த்தாக்கள், சூத்திரதாரிகள் குறித்த தகவல்கள் மெல்ல மெல்ல அரங்கத்திற்கு வந்து தூக்கத்தைக் கெடுக்கின்றது.

தமிழினத்தின் தலைவிதியை மாற்றியமைத்த விடுதலைப் புலிகளையும், அதன் தளபதிகளையும், தமிழீழ மக்களையும் கொலைக் களத்திற்கு நகர்த்திய சக்திகள் எது என்பது புரியாத தவிப்பு தற்சமயம் வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்துள்ள காலத்தில் நாம் எல்லோரும் கையறுபட்ட நிலையில் தமிழீழ போர்க் களத்தில் அத்தனையையும் இழந்து அநாதரவாக நிற்கின்றோம்.



அபாரமான திறமையும், அர்ப்பணிப்பும், துணிவும் கொண்ட விடுதலைப் போராளிகளும், தீர்க்க தரிசனமும், இலட்சியத் தடமும் கொண்ட தலைமையுமாகக் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக கள முனைகளின் போக்கைத் தீர்மானிப்பவர்களாக இருந்த விடுதலைப் புலிகள் முள்ளிவாய்க்கால் வரை நகர்ந்து எல்லாவற்றையும் இழந்தது எவ்வாறு என்ற கேள்விக்கு கிட்டத்தட்ட விடை கிடைத்துள்ளது.

கடந்த மே 15 ஆம் திகதி சிங்கள தேசத்ததால் சிறை பிடிக்கப்பட்டு, கொடும் சித்திரவதைகளை அனுபவித்து வருவதாக சீடர்களால் வர்ணிக்கப்பட்ட கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் அவர்களது ஏற்பாட்டின்பேரில், சிறிலங்கா சென்று சிங்கள அரச தரப்பினருடன் பேச்சுக்களை நடாத்தியதுடன், திரு. கே.பி. அவர்களுடன் இணைந்து யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கும் சென்று திரும்பிய ஒன்பது பேர் கொண்ட குழுவினர் வெளியிட்டு வரும் கருத்துக்கள் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை பகர்வதாகவே உள்ளது.

சிறிலங்கா சென்று சிறீலங்காவின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, நீண்ட காலம் சிறீலங்கா படைப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளராக இருக்கும் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவித்தாரன, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன் கே.பி.யையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தித் திரும்பிய 9 பேர் கொண்ட குழுவில் ஒருவரான வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை அருட்குமார் அவர்கள் தமிழ்நெற் இணையத்தளத்திற்கு வழங்கிய செய்தி தமிழீழ விடுதலைப் போரின் இறுதிக் கால துரோகங்களை அம்பலப்படுத்துவதாக உள்ளது.

முள்ளிவாய்க்காலில் தமிழீழ மக்களை அழித்துச், சிதைத்து, சிறைபடுத்திய கோத்தபாய ராஜபகஷ தற்கோது கே.பி. ஊடாகப் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை சிதைப்பதற்கும், பலமிழக்க வைப்பதற்கும், சரணடைய வைப்பதற்குமான திட்டத்தை நிறைவேற்ற முற்படுகிறார் என்பதே வைத்தியக் கலாநிதி அருட்குமார் அவர்களது கருத்தாக உள்ளது. கே.பி. அவர்களை 2006 ஆம் ஆண்டிலேயே தான் சந்தித்ததாக கோத்தபாய கூறிய தகவல் ஒன்று தமிழ் மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அத்துடன், கோத்தபாய அங்கு வந்த போது கே.பி. அவரை ஆரத்தழுவ முற்பட்டார் என்ற வைத்தியக் கலாநிதி அருட்குமார் அவர்கள் வெளியிட்ட தகவலும் தமிழ் மக்களைக் கூனிக் குறுக வைத்துள்ளது.

கருணா போலவே கே.பி. அவர்களும் சமாதான காலத்தில் சிங்கள தேசத்தால் வாங்கப்பட்டிருந்தார் என்ற சந்தேகம் கோத்தபாய ராஜபக்ஷவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கே.பி. அவர்களாலேயே விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டும் உண்மையாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு நம்பிக்கை கொடுக்கப்பட்டு, அவர்களை முள்ளிவாய்க்கால் வரை நகர்த்திய சூத்திரதாரி யார் என்ற கேள்விக்கும் விடை கிடைத்துள்ளது.

**“கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு”**

www.tamilarangam.net



முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்டது விடுதலைப் புலிகள் மட்டுமல்ல. தமிழீழ மக்களின் கனவுகள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், சுயமரியாதை, மானம், உயிர், உடமை அனைத்துமே அழிக்கப்பட்டது. புலம்பெயர்ந்த தமிழர்களின் எதிர்கால நம்பிக்கை சிதறடிக்கப்பட்டது. உலகத் தமிழர்களின் தமிழர்களுக்கான ஒரு தேசம் என்ற இலட்சியம் அடித்து நொருக்கப்பட்டது. இதற்கு எதிரிகள் மட்டுமல்ல காரணம், எம்மிடையே பிறந்து, எம்முடனே வளர்ந்து, எம் முன்னே அம்மணமாக நிற்கும் துரோகிகள் அத்தனை அழிவுகளுக்கும் பக்க துணையாக சிங்களத்திற்குத் தம் இனத்தையே விருந்தாக்கியுள்ளார்கள் என்ற கொடுமை ஜீரணிக்க முடியாததாகவே உள்ளது.

வாழவேண்டிய வயதில் ஈழத் தமிழர்களது விடுதலை வேள்விக்குத் தம்மை ஆகுதிகளாக்கிய அத்தனை ஆன்மாக்களும் பிறந்த மண்ணில் இந்தத் துரோகிகளும் பிறந்திருக்கிறார்கள். மாவீரர்களால் புனிதப்பட்ட எமது ஈழ மண்ணில் இந்த ஈனப் பிறவிகளது பாதங்களும் பரவுகின்ற வேதனையை எப்படித்தான் தாங்கிக் கொள்ளப்போகிறோமோ என்று ஈழத் தமிழர்கள் தவிக்கும் நிலை உருவாகியுள்ளது. சாத்தியமான பாதையில் பயணித்த தமிழீழ விடுதலைப் பயணத்தைத் தோற்கடிப்பதற்காக சிங்கள தேசத்திடம் விலை போய்விட்ட இந்த ஈனப் பிறவிகள் வாழும் காலத்தில் நாமும் வாழ நிர்ப்பந்தப்படுத்திய காலத்தைப் பழிப்பதைத் தவிர எதுவும் செய்ய முடியாமல் கூனிக் குறுகிப் போயுள்ளார்கள் ஈழத் தமிழர்கள்.

சிங்கள தேசம் துரோகிகளின் கரம் பற்றி, புலம்பெயர் தமிழர்களையும் சிதைத்து அடிமைப்படுத்தும் திட்டத்தோடு அனைத்து நகர்வுகளையும் மேற்கொண்டு வருகின்றது. அதற்காக, புலம்பெயர் தேசங்கள் எங்கும் வேரூன்றி உள்ள கே.பி.யின் விசுவாசிகள் களம் இறக்கப்பட்டுள்ளார்கள். புலம்பெயர் தேசங்கள் எங்கும் பெரும் நிதி முதலீடுகளில் நிறுவனங்களும், ஊடகங்களும் உருவாக்கப்பட்டு மக்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்குவதன் மூலம் புலம்பெயர் தமிழர்களின் ஒன்றுபடுதலைச் சீரழிக்கும் நடவடிக்கைகள் சிங்கள தேசத்தால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

கே.பி. குறித்த உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையிலும், கே.பி.யைப் புனிதராக்கி ஈழத் தமிழர்களின் தலைவனாக்கும் கே.பி. வாரிசுகளின் முயற்சி தற்போதைக்கு ஓய்வு நிலை அடையப் போவதில்லை. புலம்பெயர் தமிழ் மக்களிடம் உண்மையை உண்மையாக எடுத்துச் சென்று, அவர்களைத் தெளிவு நிலையில் தொடர்ந்தும் வைத்திருப்பதுடன், துரோகங்களுக்கெதிரான சக்திகளாக அவர்களைத் திரட்டும் பணியும், கடமையும் தமிழ்த் தேசிய ஊடகங்களுக்கு முன்னரிலும் பார்க்க அதிகமாக உள்ளது. இந்தத் தேசியக் கடமையை எமக்காக உயிர்நீத்த மாவீரர்களையும், மக்களையும் நினைவில் இருத்தி, வேகமாகச் செயற்பட வேண்டிய அவசியத்தை தமிழ்த் தேசிய ஊடகங்கள் உணர்ந்து கொண்டு செயலாற்ற வேண்டும்.

கே.பியால் முன்மொழியப்பட்ட 'நாடு கடந்த தமிழீழ அரசு' என்ற அரசியல் தளத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் புலம்பெயர் தமிழர்களிடம் 'கே.பி.' குறித்த தெளிவை ஏற்படுத்த வேண்டும்.

**- அகத்தியன்**



**கே.பி குழுவினரில் ஒரு பகுதியினர்...**